

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.வின் சார்பாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தலைவர்கள் கூட்டம் திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் SIR கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து நவம்பர் 11ஆம் தேதி அன்று நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பான ஆயத்த கூட்டம் மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.



தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் நடைபெற உள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து கூட்டணி கட்சியினருடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி. பழனியப்பன் ஆலோசனைகள் வழங்கி பேசினார். உடன் தொகுதி பார்வையாளர்கள் செங்குட்டுவன், அரியப்பன், நகர செயலாளர்கள் நாட்டான். மாது, எம்.பி.கௌதம், மாநில நிர்வாகிகள் இரா. தாமரைச்செல்வன், சூடப்பட்டி. சுப்ரமணி, ஆர்.பி.செந்தில்குமார் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

### எஸ்.ஐ.ஆர். கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து நடைபெறும்

# கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகப் பங்கேற்போம்!

## திருச்சி தெற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

திருச்சி, நவ. 10 -

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.வின் சார்பாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தலைவர்கள் கூட்டம் திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் SIR கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து இன்று (நவம்பர் 11ஆம் தேதி) நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பான ஆயத்த கூட்டம் மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட திர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1.S.I.R சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சாதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளதை கண்டித்து 'மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் 11-11-2025 . அன்று காலை 10.00 மணியளவில், திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெறும் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளாக கலந்து கொள்வது" என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலில் பாசிச பா.ஜ.க. உடன் இணைந்து பொருந்தாத கூட்டணி அமைத்து மக்களை களத்தில் சந்திக்க வரும் அ.தி.மு.க. வை திருச்சி தெற்கு மாவட்டத்தில் அமைந்துள்ள மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் கூட்டணி கட்சிகளின் பலத்துடன் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச்செய் து கழகத்தலைவரை மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமரச்செய்ய இக்கூட்டம் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றுகிறது.

3.தேர்தல் ஆணையம் தற்போது கொண்டு வந்துள்ள சிறப்பு தீவிர திருத்தம் ஜனநாயகத்தை பாதிக்கும் வகையில் அவசர கோலத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பம் யாருக்கு வழங்கப்படுகிறது விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுத்துள்ளார்கள் ? என்பதற்கு எந்த அத்தாட்சியும் கிடையாது. எனவே யாரையும் கழிக்கலாம், யாரையும் சேர்க்கலாம் என்ற நிலையில் தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள படிவத்தை படித்தவர்கள் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளது. இதனால் ஏழை எளிய மக்கள், பின்தங்கிய மக்களை கழிப்பதற்காக இந்த சிறப்பு தீவிர திருத்தத்தை கொண்டு வந்துள்ளனர் என கருதும் நிலையில் உள்ளதால் இதை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன் திரும்பப் பெறவும் வலியுறுத்துகிறது.

4.சிறுபான்மை வாக்குகள் பாஜகவின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றை குறிவைத்து நீக்கும் நோக்கோடு தகுதியான வாக்காளர்களை தகுதி அற்றவர்களாகவும் தகுதியற்றவர்களை புதிய வாக்காளர்களாக சேர்க்கும் திட்டத்தோடு ஒன்றிய பாஜக அரசு தனக்கு பாதுகாவலாக தேர்தல் ஆணையத்தை வைத்துக் கொண்டு இதனை செய்திட முயன்று வருவதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

5.பீகார் மற்றும் அரியானா ஆகிய மாநிலங்களில் பல லட்சம் வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது இதற்கும் முறையான பதிலை தேர்தல் ஆணையம் சொல்லவில்லை. உலகில் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ள பெரிய நாடான இந்தியாவிற்கு பாசிச பாஜகவால் விடப்பட்ட சவாலை மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் ஒன்று சேர்ந்து முறியடிக்கும் என ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

6.பீகார் சட்டமன்றத் தேர்தலில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட பாரத பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்தில் வாழும் பீகாரிகளை தமிழர்கள் துன்புறுத்துவதாக ஒரு அவதூறு பிரச்சாரத்தை மேற்கொண்டு இரு மாநில மக்களிடையே வெறுப் புணர்வை தூண்டும் விதத்தில் பேசிய பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

இக்கூட்டத்தில் மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமத், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் கோவிந்தராஜ், ரெக்ஸ், ம.தி.மு.க. வெல்லமண்டி சோமு, தமிழ்மாணிக்கம், வி.சி.க. சக்தி ஆற்றல் அரசு, கனியமுதன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஹபீபுர் ரகுமான், அலாவுதீன், பேராசிரியர் மொய்தீன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி ராஜ்குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வெற்றி, சிவராசன், மனித நேய மக்கள் கட்சி முகமது ராஜா, பயாஸ், ஆதிதமிழர் பேரவை முருகேசன், மதன் குமார், திராவிட கழகம் ஆரோக்கியராஜ், சேகர், தமிழக வாழ்வுரிமைக் கட்சி ராயல் ராஜா, பொன்னுச்சாமி, கொங்கு பேரவை தேவராஜன், மூவேந்தர் முன்னேற்ற கழகம் அருள்ராஜ், கண்ணன், தமிழக மறுமலர்ச்சி கழகம் பொன் முருகேசன், மக்கள் நீதி மையம் சுரேஷ், முக்குலத்தோர் புலிப்படை சா. கார்த்திக், மனிதநேய ஜனநாயக கட்சி செரிப், ஃபார்வேர்ட் பிளாக் வெங்கடேசன், ஆம் ஆத்மி வக்கீல் இளங்கோ, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அந்தியூர் பத்ரகாளியம்மன் கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் பாலாலயம் நிகழ்ச்சி நடைபெற உள்ளதையொட்டி அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் தலைமையில், இந்து சமய அறநிலையத் துறை ஈரோடு உதவி ஆணையர் சுகுமார், உதவி செயற்பொறியாளர் காணீஸ்வரி, ஆய்வாளர் சிவமணி ஆகியோர் கோவிலை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

### நாகை மாவட்டத்தில் 27,543 ஹெக்டேர் அறுவடை! 123 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில்

# 2 மாதத்தில் 1,07,764 மெ.டன் நெல் கொள்முதல்!

## நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல்!

நாகை நவ.11--

நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் 4.11.2025 அன்று வரை 1,07,764 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் தகவல்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் இந்த ஆண்டு டெல்டா பகுதி குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையை தனது பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு அதன் பின் ஜூன் 15ஆம் தேதி கழகத் தலைவர் தளபதியே கல்லணையை திறந்து வைத்தார்.

இதையடுத்துடெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி பணி முழு வீச்சில் தீவிரமாக நடைபெற்றது. குறுவை சாகுபடிக்கு தேவையான தண்ணீரை தட்டுப்பாடு இன்றி மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்டது. மேலும் விதை நெல் உரம் தட்டுப்பாடு இன்றி அனைத்து பகுதிகளும் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க தமிழ்நாடு அரசின் மேலாண்மை துறை சிறப்பாக பணியாற்றியது. இதனால் இந்த ஆண்டு குறுவை நெல் சாகுபடி சிறப்பாக நடைபெற்று அதிக மகசூல் கிடைத்தது. குறுவை நெல் அறுவடை பணி தொடங்கும் முன்பே திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி அவர்கள் விவசாயிகள் விளைவிக்கும் நெல்லை சேதாரம் இன்றி கொள்முதல் செய்ய அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க செய்ததோடு கொள்முதல் செய்ய தேவையான சணல் சாக்குகள் நெல் கொள்முதல் நிலையங்க ளில் தேவைக்கேற்ப முழுமையாக வழங்கப்பட்டது இதனால் தங்கு தடையின்றி விவசாயிகளிடம் இருந்து அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் தங்கு தடை இன்றி கொள்முதல் செய்யப்பட்டது.

மேலும் தமிழ்நாடு முதல்வர் தளபதி ஆணைக்கிணங்க உணவு துறை அமைச்சர் சக்கரபாணி நாகை மாவட்டத்திற்கு இரண்டு முறை வருகை தந்து விவசாயிகள் கொண்டு வரும் நெல்களை தடை இன்றி அனைத்து நெல்லையும் நெல் கொள்முதல் செய்வதற்காக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்வுக் கூட்டத்தையும், மாடர்ன் ரைஸ் மில் உரிமையாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தையும் நடத்தியதோடு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நேரடியாக சென்று நெல் கொள்முதல் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அத்துடன் கொள்முதல் நிலையத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் சீரிய முயற்சியால் இந்த ஆண்டு நாகை மாவட்டத்தில். குறுவை பருவத்தில் சுமார் 30,217 ஹெக்டர் பரப்பளவில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு, 04.11.2025 வரை சுமார் 27,543 ஹெக்டர் பரப்பளவில் குறுவை சாகுபடி அறுவடை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,674 ஹெக்டர் அறுவடைப்பணி மற்றும் நெல் கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது. விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்ட 23,146 விவசாயிகளுக்கு ரூ. 256.67 கோடி பணம் கொள்முதல் செய்யப்பட்ட இரண்டு நாட்களுக்குள் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் திராவிடம் மாடல் அரசு வரவு வைத்துள்ளது

இது குறித்து நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது

நாகை மாவட்டத்தில் குறுவை பருவத்தில் சுமார் 30,217.34 ஹெக்டர் பரப்பளவில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு, 04.11.2025 வரை சுமார் 27,543 ஹெக்டர் பரப்பளவில் குறுவை சாகுபடி அறுவடை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,674.34 ஹெக்டர் அறுவடைப்பணி மற்றும் நெல் கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இந்த ஆண்டு 30, 217 ஹெக்டர் நிலப் பரப்பில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டது. இந்தக் குறுவை அறுவடைப்பணி தற்பொழுது முழு வீச்சில் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. குறுவை மகசூலை பொருத்தவரை .அரசாட்சி காலத்தில்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் காரீப் 2025-2026 ஆம் ஆண்டு குறுவை பருவத்தில் திறக்கப்பட்ட 123 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 03.09.2025 முதல் 04.11.2025 வரை 1,07,764 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் 04.11.2025 ஒரே நாளில் 117 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 3,010 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அவற்றில் இதுவரை சுமார் 91,218 மெ.டன் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு, ஆலைகள் மற்றும் பிற மாவட்ட மண்டலங்களுக்கு இயக்கம் செய்யப்பட்டு, மீதமுள்ள 16,546 மெ.டன் நேரடி நெல் கொள்முதல் நிலையங்க ளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு நகர்வு பணிகள் நடைபெற்றுவருகிறது. 04.11.2025 ஒரே நாளில் சுமார் 2,871 மெ.டன் பாதுகாப்பாக இயக்கம் செய்யப்பட்டுள்ளது.


நாகப்பட்டினம் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம், 03.09.2025 முதல் 04.11.2025 வரை 23,146 விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு, இதுவரை ரூபாய் 256 கோடியே, 67 இலட்சத்து, 17 ஆயிரத்து 226 தொகை அவர்தம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாகைமாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பண்ருட்டி மணி

### நவம்பர் 11 (1999)



**பண்ருட்டி நகரக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த மொழிப் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 21 முறை சிறை சென்றவர்.**

**மிசாவில் கைதாகி சென்னை மத்திய சிறையில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.**

**"நிமிர்ந்து நின்றால் வேங்கைப்புலி! சிரித்தால் ஒரு செழிப்பு! பேசினால் ஒரு நேசம், பாசம்! அந்த உருவம் என் கண்ணைவிட்டு என்றும் மறையாது" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செங்கை சிவம்

### நவம்பர் 11 (2015)



**இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக பெரம்பூர் பகுதிக் கழகச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – தேர்தல் பணிக் குழுச் செயலாளர்– கலை,இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1989, 1996–ல் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**அகில இந்திய கூட்டுறவு வீட்டு வசதி வாரிய தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**"பெரம்பூர் பகுதியில் கழகத்தை வளர்த்த காவலர்களில் ஒருவராகவும் விளங்கி, அருந்தொண்டாற்றிய அருமைத் தம்பி" என்று தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**